# மாதிரி வினாத்தாள் - 2018-19

## SAMPLE QUESTION PAPER -2018-19

**பத்தாம் வகுப்பு** — **மொத்த மதிப்பெண்கள் : 80**

**[ X –STD ]** — **Maximum marks: 80**

**தமிழ்** — **கால அளவு : 3 மணி**

**TAMIL** — **Time Allowed : 3 hours**

---

## பகுதி அ [ படித்தல் உரைநடைப்பகுதி ]

**SECTION - A [ READING COMPREHENSION ] MARKS - [15]**

**(1 ) பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.** **(5)**

ஜி.யூ.போப் அவர்கள் ஒருமுறை சென்னை உயர்நீதிமன்ற நடுவரான தன் நண்பருக்குக் கடிதம் எழுதினார் அஞ்சல் பெட்டியில் அதனைச் சேர்த்தார் மறுநாள் நண்பரின் கைக்குக் கடிதம் கிடைத்தது . பிரித்துப்பார்த்தார் ; எழுதியது போப் என்று அறிந்தார்; என்ன எழுதினார் என்று தெரியவில்லை. காரணம் அந்தக் கடிதம் கலங்கி இருந்தது .கடித வாசகங்கள் தண்ணீர் பட்டது போல கரைந்து இருந்தன. எனவே அவரால் முழுமையாகப் படிக்க முடியவில்லை பேசாமல் வைத்து விட்டார். தொடர்ந்து மூன்று கடிதங்கள் போப்பிடம் இருந்து வந்தன. எல்லாக் கடிதங்களும் கலங்கி இருப்பதைக் கண்டு நண்பர் வியப்புற்றார். நண்பர் என்ன விளையாடுகிறாரா? என எண்ணினார்.

நேரே அவரிடமே சென்று கடிதங்களைக் காண்பித்து 'நண்பரே, இஃது என்ன விளையாட்டு ? கடிதம் எழுதித் தண்ணீரைத் தெளித்து அனுப்பியுள்ளீர்". என்று கேட்டார்

அதற்கு ஜி.யூ.போப், "நண்பரே நான் விளையாடும் பருவத்தைக் கடந்தவன் நான் எப்போதும் கடிதம் எழுதும் போது 'வெள்ளம் தாழ் சடையாய்' எனத் தொடங்கும் திருவாசகப் பாடலை எழுதிய பின்பே கடிதம் எழுதுவது வழக்கம். அந்தப் பாடலை எழுதிவிட்டு உங்களுக்கு எழுதிய கடிதத்தை முடிக்கும் முன்பே என் கண்களில் கண்ணீர் வழிகிறது. அது நான் எழுதும் கடிதத்தில் பட்டு விடுகிறது. முற்றுப் பெறாத கடிதத்தின் கலங்கலுக்குத் தண்ணீர் காரணம் அல்ல என் கண்ணீரே காரணம் " என்றார். ஆம்! திருவாசகம் போப்பின் சிந்தையைக் கரைத்து சிவமாக்கியது கண்ணீரை வரவழைத்தது.

<u>வினாக்கள்.</u>

i) போப் கடித முகப்பில் எந்த நூலின் பாடலை எழுதினார்?
அ) திருக்குறள் ஆ) திருவாசகம் இ) தேவாரம் ஈ) நாலடியார்.

ii) கடிதத்தைப் படிக்க முடியாமைக்குக் காரணம்
அ) தண்ணீர் பட்டிருந்தது ஆ) முழுமையாக இல்லை
இ) கலங்கி இருந்தது. ஈ) தமிழ் தெரியாது.

iii) போப் யாருக்குக் கடிதம் எழுதினார்.?
அ) வழக்கறிஞர்க்கு ஆ) முன்சீப்புக்கு
இ) உயர்நீதிமன்ற நடுவர்க்கு ஈ) தந்தைக்கு

Iv) கடிதத்தின் கலங்கலுக்குக் காரணம்

அ) கண்ணீர் ஆ) தண்ணீர் இ) மழை ஈ) இவை எல்லாம்.

v) போப் நண்பருக்கு எழுதிய கடிதங்கள்.

அ) பலப்பல ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு

**2. பின்வரும் பகுதியைப் படித்து,கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.** **(5)**

லியனார்டோ டா வின்சி என்றதும் நினைவுக்கு வருவது என்ன ? அவர் வரைந்த மோனாலிசாவும், இறுதி விருந்தும்தானே. 1452ஆம் ஆண்டு இத்தாலியில் உள்ள வின்சி நகரில் பிறந்த அவர் , ஓவியர் என்பதைத் தாண்டியும் பல அடையாளங்களைக் கொண்ட வர். ஒரே நபர் பல துறைகளிலும் சிறந்து விளங்குவது அரிது . அப்படி அரிதினும் அரிதான மனிதர்தான் லியனார்டோ. ஓவியம் வரைவதுடன் சிலைகள் வடிப்பதிலும் அவர் சிறந்து விளங்கினார் . அறிவியல் கண்டுபிடிப்புகள் பலவற்றின் முன்னோடி அவர் . அவர்தான் சைக்கிளைக் கண்டுபிடித்தார் என்று சொல்கிறவர்களும் உண்டு.

பொறியியல் துறையிலும் இவருடைய பங்களிப்பு குறிப்பிடத் தக்க அளவில் இருந்தது . மத்திய இத்தாலியில் பாயும் ஆர்னோ ஆற்றின் குறுக்கே கட்டுவதற்கான ஒற்றைப் பாலத்தின் மாதிரியை வடிவமைத்துக் கொடுத்தவர் லியனார்டோதான் . எதிரிகளின் தாக்குதலில் இருந்து நகரத்தைக் காப்பாற்றக்கூடிய நகரும் தடுப்பரண்களையும் அவர் வடிவமைத்தார். அறிவியல் உண்மைகள் , கண்டுபிடிப்புகள் தொடர்பான அவரது தொகுப்பில் கிட்டத்தட்ட 13 ஆயிரம் படங்கள் இடம்பெற்றிருந்தன. எல்லாமே இந்த உலகைக் குறித்த அவரது அறிவியல் பார்வையின் வெளிப்பாடுகள். பறவைகளால் மட்டுமே பறக்க முடியும் என்ற எண்ணம் வேரூன்றி இருந்த அந்தக் காலத்திலேயே கிளைடர்கள் , ஹெலிகாப்டர், போர் எந்திரங்கள் ஆகியவற்றின் மாதிரிகளை வரைந்தார் டா வின்சி ..அவர் மிகச் சிறந்த கண்டுபிடிப்பாளர் என்பதை , அவரது மறைவுக்குப் பிறகுதான் உலகம் உணர்ந்தது

I. லியனார்டோ டா வின்சி பிறந்த நாடு

அ) வின்சி ஆ) இத்தாலி இ) இங்கிலாந்து ஈ) எதுவுமில்லை

II. லியனார்டோ டா வின்சி ஒவியர் மட்டும் அல்லர் அவர் ஒரு ..............................

அ) அரசியல்வாதி ஆ) விவசாயி இ) கண்டுபிடிப்பாளர் ஈ) கவிஞர்

III. லியனார்டோ டா வின்சி என்றதும் நினைவுக்கு வருவது

அ) மோனாலிசா, ஆ) இறுதி விருந்து இ) மிதிவண்டி

ஈ) மோனாலிசாவும்இறுதி விருந்தும்

IV. அவரது தொகுப்பில் இடம்பெற்றிருந்த படங்கள்

அ) 13 ஆயிரம் ஆ) கிட்டத்தட்ட 13 ஆயிரம்

இ) 10 ஆயிரம் ஈ) 12 ஆயிரம்

V. லியனார்டோ டா வின்சி இவற்றின் மாதிரிகளை வரைந்தார்

அ) கிளைடர்கள், ஆ) ஹெலிகாப்டர், இ) போர் எந்திரங்கள்

ஈ) இவை மூன்றும்

**3. <u>பின்வரும் பகுதியைப் படித்து,அதனை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக</u>** **(5)**

போர்க்களத்தில் போர் செய்யும் பீரங்கிகள் ஏன் எதிரிகளை நேருக்கு நேர் நோக்குவதில்லை.. ? எங்கேயோ வானத்தைப் பார்த்து வைக்கப்பட்டிருக்கின்றன ? . காவலர் நேருக்கு நேர்தானே துப்பாக்கியைப் பிடித்திருக்கிறார்கள். பீரங்கிகளை இயக்கி எதிரிகளின் முகாம்களை அழிக்க வேண்டும் என்றால், அவை முகாம்களை நேருக்கு நேர்தானே குறி வைக்க வேண்டும்.

குண்டுகள் மலைகளைத் தாண்டிச் சென்று விழ வேண்டும் என்பதற்காக வானத்தை நோக்கியதுபோல வைக்கப்படுகின்றன என்று கூறினால் அது தவறு. ஏனெனில், சமவெளிகளில் நின்று போர் செய்யும்போதுகூடப் பீரங்கி வண்டிகளின் குண்டுகள் பாயும் குழல்கள் மேல் நோக்கியே இருக்கும். பார்ப்பதற்கு ஏதோ வானத்து நட்சத்திரங்களை வீழ்த்துவதற்கு வைக்கப்பட்டுள்ளதுபோலத் தோன்றும்.

இதற்கான காரணத்தை ஒரே வரியில் சொல்லிவிடலாம். காற்றின் விசையிலிருந்து தப்பிக்கவே பீரங்கிகள் மேல்நோக்கிய திசையில் வைக்கப்படுகின்றன. ஆம் , பீரங்கிக் குண்டுகளைக் காற்று தடுத்து , அதன் வேகத்தைக் குறைத்துவிடுகிறது. மேல் நோக்கிக் குண்டுகளைச் செலுத்துவதால் பீரங்கிக் குண்டுகளுக்கு எதிராகக் காற்றின் சக்தியை முழுவதும் குறைத்துவிட முடியாது. ஏதோ முடிந்த வரை குறைக்கலாம்.

பீரங்கிக் குண்டுகளை மேல் நோக்கிச் சுடும்போது அவை அதிக உயரத்துக்குச் செல்கின்றன. மேலே வளிமண்டல அழுத்தம் குறைகிறபோது பீரங்கிக் குண்டுகளின் வேகத்தைப் பாதிக்கும் காற்றின் எதிர்ப்புச் சக்தியும் குறைகிறது. எனவே, பீரங்கிக் குண்டுகள் நீண்ட தூரம் பயணிக்கின்றன. நீண்ட வளைகோட்டில் பயணம் செய்து தூரத்தில் இருக்கும் இலக்கைத் தாக்குகின்றன. 30 டிகிரி சாய்வுக் கோணத்தில் வைக்கப்பட்டிருக்கும் பீரங்கியிலிருந்து செல்லும் குண்டுகளை விட 40 டிகிரி சாய்வுக் கோணத்தில் வைக்கப்பட்டிருக்கும் பீரங்கியின் குண்டுகள் அதிக தூரம் பயணித்து நீண்ட தூர இலக்கைத் தாக்குகின்றன.

## பகுதி-ஆ [ எழுதுதல் ]

### SECTION - B [ WRITING ] MARKS - [14]

4 .நீ வாழும் பகுதியில் பொது மருத்துவமனை அமைத்துத் தருமாறு நல்வாழ்வுத்துறை இயக்குநர்க்குக் கடிதம் எழுதுக. **(6)**

அல்லது

மிதிவண்டியைப் பயன்படுத்துவதால் விளையும் நன்மைகள் குறித்து அயலூர் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

[உன் முகவரி: அ.பிறைசூடன் /அ.பூம்பாவை 15. ஞானசம்பந்தர் தெரு, மயிலாப்பூர், சென்னை-4 ]

5. **பின்வருவனவற்றுள் எதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுது** (8)

அ) முன்னுரை- பெருகி வரும் போக்குவரத்து - மக்கள்நெருக்கம்- சாலைவிதிகளைப் பின்பற்றாமை- சாலை விபத்துகளின் உயர்வு- தடுக்கும் வழிமுறைகள் - சட்டமும் மனமாற்றமும்- முடிவுரை.

ஆ முன்னுரை- பண்பாடு - மாணவர்களுக்கு வேண்டியன- ஒழுக்கம் - கல்வியைவிட சிறந்தது - மாணவர் வளர்ச்சி - நாட்டின் வளர்ச்சி - முடிவுரை.

இ. முன்னுரை -ஊடகங்கள் - செய்தித்தாள்-தொலைக்காட்சி- தொலைத்தொடர்பு-இணையம்- சமூக வளைத்தளங்கள்- பயன் – பயன்படுத்தும் முறை - முடிவுரை.

## பகுதி - இ [ இலக்கணம் ]

### SECTION - C [ GRAMMAR ] MARKS - [15]

6 . **சான்று தருக (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)** (3)

I. தெரிநிலைப்பெயரெச்சம்
அ. பாடியபாட்டு ஆ.நல்லபண்பு இ.அழகியகிளி ஈ. சிறியமான்

II. . ஔகாரக்குறுக்கம்
அ. ஔ ஆ. ஐம்பது இ. கௌதம் ஈ. அவ்வையார்

III. பொதுமொழி
அ. மான் ஆ. அந்தமான் இ. ஆடியமான் ஈ. பெரியமான்

IV. குறிப்பு வினைமுற்று
அ) சென்ற கோதை ஆ) நல்ல மாணவன் இ) படித்தான்
ஈ) அவன் இனியன்

V .தெரிநிலை வினைமுற்று
அ) படித்தான் ஆ) படம் பார்த்தான் இ) வா ஈ) வந்த மான்

7. **நிரப்புக [எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ]** (3)

I. ஒரு சொல் தன்னை மட்டும் உணர்த்தாது தனக்கு இனமானவற்றையும் உணர்த்துவது _________ ஆகும்..
அ ) ஆகுபெயர் ஆ) இனமொழி இ) இனங்குறித்தல்
ஈ) வல்லினம்

II. மருதநிலம் என்பது ___________.
அ. வயலும் வயல் சார்ந்த இடமும் ஆ. மலையும் மலை சார்ந்த இடமும் இ. கடலும் கடல் சார்ந்த இடமும் ஈ. காடும்காடு சார்ந்த இடமும்

III. விடை ..........................வகைப்படும்.
அ )ஆறு ஆ) ஏழு இ ) எட்டு ஈ ) ஐந்து

IV. வெட்சி நிரை கவர்தல் என்பதில் உள்ள நிரை என்பதன் பொருள் __________

அ .பசு ஆ. பசுக்கூட்டம் இ.கூட்டம் ஈ. வரிசை

V. குறிப்பால் ஒரு பாலை நீக்கி மற்றொரு பாலைக் குறிப்பது ..........................

அ ) இனங்குறித்தல் ஆ) ஒன்றொழி பொதுச்சொல்

இ) பொது ஈ) குறிப்பு வினைமுற்று

**8. கூறியவாறு செய்க (எவையேனும் மூன்றனுக்கு மட்டும் )** **(3)**

I. .நெட்டெழுத்து ( விதியினைக்கூறு )

அ. இனமிகல் ஆ. ஆதிநீடல் இ. தன்னொற்றிரட்டல்

ஈ. அடி அகரம் ஐயாதல்.

II. துப்பாக்கி (அசை பிரித்து வாய்பாடு கூறு )

அ. நிரை நேர் நேர் - புளிமாங்காய் ஆ. நேர் நேர் நேர் - தேமாங்காய் இ. நிரை நிரை நேர் - கருவிளங்காய்

ஈ. நேர் நிரை நேர் -கூவிளங்காய்

III. பாலை (சரியானதைப் பொருத்துக.)

அ. ஏறு தழுவல் ஆ.களை எடுத்தல் இ.கிழங்கு அகழ்தல்

ஈ. வழிப்பறி செய்தல்

IV. சிறுமை+ஓடை ( சேர்த்து எழுதுக )

அ. சிறு ஓடை ஆ .சிறுமை ஓடை இ .சிற்றோடை ஈ . சித்தோடை

V. இலை ( அளவுப்பண்புப் பெயர் சேர்த்து எழுதுக )

அ. வெற்றிலை ஆ. கற்றிலை இ. பாசிலை ஈ. சிற்றிலை

**9. இலக்கணக் குறிப்பு எழுதுக. (எவையேனும் மூன்று)** **(3)**

I. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

அ. ஒரு விகற்பக் குறள்வெண்பா ஆ. பல விகற்பக் குறள்வெண்பா

இ. இரு விகற்பக் குறள்வெண்பா ஈ. சிந்தியல் வெண்பா

II. மூன்று அடிகளால் அமையும் வெண் பா

அ. இன்னிசை வெண்பா. ஆ. குறள் வெண்பா. இ. நேரிசை வெண்பா

ஈ. சிந்தியல் வெண்பா

III. கருப்பொருள்

அ. நிலமும் பொழுதும் ஆ.விளையும் பொருள்

இ மக்கள் முதலியோர் ஈ. சிறுபொழுது

IV. தென் இந்தியா

அ.திசையோடு திசை சேர்ந்த புணர்ச்சி ஆ. திசையோடு பிற சேர்ந்த புணர்ச்சி இ.பிறவற்றோடு திசை சேர்ந்த புணர்ச்சி ஈ. எதுவுமில்லை

V. அகத்திணையிலும் புறத்திணையிலும் இடம் பெறுவன

அ. கைக்கிளை ஆ. பெருந்திணை இ. கைக்கிளையும் பெருந்திணையும் ஈ.எதுவுமில்லை

**10. சரியான தொடரைத் தேர்வு செய்க (எவையேனும் மூன்று )** **(3)**

I. அ. கற்சிலை என்பது தோன்றல் விகாரம்.
ஆ கற்சிலை என்பது திரிதல் விகாரம்.
இ கற்சிலை என்பது கெடுதல் விகாரம்.
ஈ கற்சிலை என்பது இயல்புப் புணர்ச்சி.

II. அ. பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை மாலை
ஆ.. பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை எற்பாடு
இ . பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை நண்பகல்
ஈ. பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை இரவு

III. அ. மிக்கோர் செருவென்றது கரந்தை
ஆ.. மிக்கோர் செருவென்றது வாகை.
இ மிக்கோர் செருவென்றது தும்பை.
ஈ. மிக்கோர் செருவென்றது வெட்சி

IV. அ. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது வெண்பா
ஆ.ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது ஆசிரியப்பா..
இ. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது.வஞ்சிப்பா .
ஈ. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது கலிப்பா

V. . அ.செய்யுளை அழகு படுத்த வருவது சொல் இலக்கணம்
ஆ. செய்யுளை அழகு படுத்த வருவது பொருள் இலக்கணம் ..
இ. செய்யுளை அழகு படுத்த வருவது அணி இலக்கணம்
ஈ.செய்யுளை அழகு படுத்த வருவது யாப்பு இலக்கணம்

## பகுதி- ஈ [ இலக்கியம் / தமிழ்ப்பாடநூல் ]

**SECTION - D [ LITERATURE / TEXT BOOKS ] MARKS - [36]**

11. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக. **(5)**

மேடைப்பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி என்றாலும் அக்கருத்துகளை வெளியிடும் மொழியும் முறையும் இன்றியமையா இடத்தைப் பெறுகின்றன.பேச்சுக்கலையில் வெற்றிபெற வலிமையான கருத்துகள் தேவை ஆயினும் அவற்றை கேட்டார் பிணிக்கும் வகையில் பேசத்தெரிதல் வேண்டும்.பேச்சாளரின் நெஞ்சிலே உள்ள கருத்துகள்கேட்பவர்கள் நெஞ்சிலே பாய வேண்டும்.அதற்கு மொழி கருவியாக உள்ளது. பேசும் மொழி அழகியதாகவும்தெளிவாகவும் சிக்கலற்றதாகவுமிருக்க வேண்டும் . அழகிய சொற்களால் இனிமையாகவும் எளிமையாகவும் சிக்கலற்றதாகவும் நுட்பமாகவும் கருத்தை உணர்த்த வல்லது சிறந்த மொழிநடை.சொல்கின்ற முறையில் அச்சொல்லுக்கு தனிப்பொருளும் தனி வேகமும் பிறக்கின்றன

.எனவே எதைச் சொல்ல நினைக்கிறோமோ அதைத் தெளிவாகக் காலம் அறிந்து சொல்ல வேண்டும்.

I. மேடைப்பேச்சுக்கு எது உயிர்நாடி ?
II. மேடைப்பேச்சில் இன்றியமையா இடத்தைப் பெறுவன யாவை?
III. பேசும் மொழி எவ்வாறு இருக்க வேண்டும்?
IV. சொல்ல நினைப்பதை எவ்வாறு சொல்ல வேண்டும்?
V. இப்பத்திக்கு எற்ற தலைப்பொன்று தருக.

12. <u>பின்வரும் செய்யுள் **பகுதியைப் படித்து அதன்** அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி</u> **(4)**

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவிற் கடைமணி நெஞ்சுசுடத் தாந்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர் புகாரென் பதியே"

I. இச்செய்யுளடிகள் இடம் பெற்ற நூல்
அ)பெரிய புராணம் ஆ)சிலப்பதிகாரம் இ)திருவருட்பா
ஈ)கம்பராமாயணம்
II. ஆராய்ச்சி மணியை அடித்தது அல்லது அடித்தவர்
அ) கண்ணகி ஆ) கோவலன் இ) பசு ஈ ) வீதி விடங்கன்
III. ஆழியின் மடித்தோன்
அ) பாண்டியன் ஆ)சோழன் இ)மனுநீதி சோழன் ஈ)வீதி விடங்கன்
IV. புகார் என் ஊர் என்றவர்
அ)கண்ணகி ஆ)கோவலன் இ )மனுநீதி சோழன்
ஈ) வீதி விடங்கன்

**<u>13.பின்வரும் குறட்பாக்களைச் சரியான சீர்களால் நிரப்புக.</u>** **(2)**

I. "ஒழுக்கம் ........................தரலான் ஒழுக்கம்
உயிரினும்.........................படும்."
II. "ஞாலம் கருதினும்..........................காலம்
கருதி ......................செயின்."

**<u>14. எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடையளி</u>.** **(8)**

I. நாமார்க்கும் குடியல்லோம் என்று நாவரசர் முழங்குவன யாவை ?
II. குகன் இராமனைக் கண்டமுறையும் பணிந்த முறையும் குறித்து எழுதுக.
III. .வித்துவக் கோட்டு இறைவனிடம் ஆழ்வார் வேண்டுவது யாது ?
IV. நற்றிணையில் நல்வேட்டனார் காட்டும் அகல்வயல் காட்சிகளை விவரி..

**15. எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடையளி.**

**(10)**

I. தமிழ் மொழியின் இலக்கணச் சிறப்பை எழுதுக.
II. காந்தியடிகளின் அறவழி விடுதலைப்போர் குறித்து எழுதுக.
III. இராமலிங்கரின் உயிரிரக்கம் பற்றிய கருத்துகளை எழுதுக...
IV. அறுவைமருத்துவம் பற்றிய தமிழிலக்கிய செய்திகள் யாவை?.
V. பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பவை குறித்துப் பெரியார் கூறியன யாவை?

16 ஏதேனும் ஒன்று பற்றித் துணைப்பாடக் கட்டுரை எழுதுக: **(7)**

I. அடித்தளம் - கதைச்சுருக்கம்
II. அயோத்திதாச பண்டிதரின் சமுதாயப் பணிகள்
III. அண்ணாவின் கடிதம்

..................................................................